தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.205/பேரூ/2023
நாள். 05.09.2023

திரு. C. மோகனதாஸ்,
பாகோடு,
கன்னியாகுமரி மாவட்டம் ... மனுதாரர்

செயல் அலுவலர்,
பாகோடு பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம் .... எதிர்மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், பாகோடு அஞ்சல், 28–95, வலியவிளை, பேரை என்ற முகவரியைச் சேர்ந்த திரு. C. மோகனதாஸ் என்பவரது 11.07.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.07.2023 அன்று பெறப்பட்டு, 205/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கன்னியாகுமரி மாவட்டம், பாகோடு அஞ்சல், 28–95, வலியவிளை, பேரை என்ற முகவரியைச் சேர்ந்த திரு. C. மோகனதாஸ் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

" கன்னியாகுமரி மாவட்டம், பாகோடு பேரூராட்சி, வார்டு எண்.5, புலயன் விளை பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய 2020–2021 நிதியாண்டில் விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.4,00,000/– (நான்கு இலட்சம்) ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஆனால் மேற்குறிப்பிட்ட குடிநீர்த்திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படவில்லை என்ற உண்மை எனக்கு தெரியவந்ததால் பொது மக்களின் நலன்கருதி 23.03.2022 நாளிடப்பட்ட மனுவில் மேன்மைதங்கிய கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், நாகர்கோவில் பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அவர்களுக்கும் திட்டத்தை முறையாக செயல்படுத்தி மக்கள் பயன்பாட்டிற்கு வரவும், தவறு செய்தோர் மீது நடவடிக்கை எடுக்க கேட்டும் புகார் செய்தேன். நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

இது தொடர்பாக முதலாவதாக குற்றஞ்சாட்டப்பட்டவரான பாகோடு பேரூராட்சி பொது தகவல் அலுவலருக்கு தகவல் அறியும் உரிமை சட்டப்படி சில தகவல்கள் கேட்டு 04.04.2022–ல் மனு செய்தேன். ந.க.எண். 105/2022/அ1, நாள் 06.05.2022–ல் தகவல் வழங்கப்பட்டது. அத்தகவலில் வரிசை எண் 1 புலையன் விளை பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து குடிநீர் விநியோகம் செய்தல் 27.08.2021 முதல் மக்கள் பயன்பாட்டில் உள்ளது. வரிசை எண்.4 இப்பணிக்கான பட்டியல் தொகை ரூ.3,58,904/– 27.08.2021 அன்று வழங்கப்பட்டுள்ளது.

முதலாவது குற்றஞ்சாட்டப்பட்டவர் தகவல் அறியும் உரிமை சட்டப்படி கொடுத்துள்ள மனுவிற்கு கொடுத்த தகவலின்படி பார்த்தால் திட்டம் பயன்பாட்டிற்கு வந்த 27.08.2021 அன்றே மேல்குறிப்பிட்ட குடிநீர்த்திட்டப்பணிக்கான ஒப்பந்த தொகை வழங்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், திட்டம் மதிப்பீடுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளதா, மக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளதா என்பதை முறையாக ஆய்வு செய்யாமல் முறைகேடாக ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கியது உள்நோக்கம் கொண்டது ஆதாயம் பெற்றுக் கொண்டு அவசர அவசரமாக ஒப்பந்தத் தொகை வழங்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், ஒப்பந்ததாரருடன் சேர்ந்து கூட்டு சதி மற்றும் முறைகேடு செய்து மக்கள் வரிப்பணத்தை விரயம் செய்ய காரணமாயிருந்துள்ளனர்.

இது தொடர்பாக 07.12.2022–ல் நாகர்கோவில் துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவிற்கு நான் கொடுத்த புகார் மனுவிற்கு ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், சென்னை Petition No. 15310/2022/TP/KK Dated 23.12.2022- ன்படி சென்னை, பேரூராட்சிகள் இயக்குநரகத்திற்கு தேவையான நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்தும் மேற்குறிப்பிட்ட குடிநீர்த்திட்டம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வராமல் இன்றும் காட்சிப்பொருளாக உள்ளது. இதுவரை மேற்படி குடிநீர் திட்டம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

மேற்குறிப்பிட்ட குடிநீர் திட்டம் செயல்படவில்லை. மக்கள் பயன்பாட்டிற்கு வரவில்லை என்பதற்கு ஆதாரமாக அதன் மின்இணைப்பு எண்.182–006–1515–ன் மின்பயனீட்டாளர் கட்டண விபரப்பட்டியல் இக்குற்றச்சாட்டு மனுவில் ஆவணமாக இணைத்துள்ளேன் என்பதை தங்கள் மேலான பார்வைக்கு கொண்டு வருகிறேன்.

ஆகவே மேன்மை தங்கிய உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் உரிய விசாரணை மேற்கொண்டு மேல்குறிப்பிட்ட குடிநீர் திட்டத்தை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர

ஆணை பிறப்பிக்கவும், தவறு செய்தோர் மீது நடவடிக்கை எடுக்கவும் ஆணையிட பணிந்து வேண்டுகிறேன் என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார்மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 24.07.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் பாகோடு பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) பாகோடு பேரூராட்சி செயல் அலுவலர் தனது 21.08.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள புலையன்விளையில் ஆழ்குழாய் கிணறு மற்றும் பைப்லைன் அமைத்தல் பணியானது 2020-2021 ஆம் வருட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.4,00,000/- மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சியர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செ.மு.எண்.ஆ3/3006/2020, நாள் 18.02.2021 இன் படி நிர்வாக அனுமதி கிடைக்கப்பெற்று பாகோடு பேரூராட்சி அலுவலக ந.க.எண் 33/2021/அ1, நாள் 19.02.2021-இன்படி ஒப்பந்த அறிவிப்பு வழங்கப்பட்டு, 25.05.2021 அன்று ஒப்பந்தங்கள் பெறப்பட்டது. ஒப்பந்தத்தில் திரு. சி. ராஜன், பெருந்தறவிளை, பாகோடு அஞ்சல் மற்றும் திரு. எ. அனில்குமார் கண்ணக்கோடு மார்த்தாண்டம் என்பவர்கள் ஒப்பந்தங்கள் சமர்பித்தனர். அதில் குறைவாக ஒப்பந்தம் சமர்ப்பித்துள்ள திரு. எ. ராஜன், பெருந்தறவிளை, பாகோடு அஞ்சல் என்பவருக்கு பேரூராட்சி அலுவலக ந.க.எண். 33/2021/அ1, நாள் 25.02.2021-இன் படி வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைப்பதற்கு Ground Water Investigation Report அமைப்பதற்கு Anand Ground Water Centre- லிருந்து அறிக்கை பெறப்பட்டு ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டு பருத்திவிளை பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்ய விநியோகக் குழாயுடன் இணைக்கப்பட்டு செய்து முடிக்கப்பட்டது இளநிலை பொறியாளர் அவர்களால் செய்து முடிக்கப்பட்ட வேலைக்கான பட்டியல் தயார் செய்யப்பட்டு அப்பட்டியலினை உதவி செயற்பொறியாளர் அவர்களால் மேலாய்வு மேற்கொள்ளப்பட்டு பணி செய்து முடிக்கப்பட்டதற்கு தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 23.08.2021 அன்று கையொப்பமிடப்பட்டு பட்டியல் பேரூராட்சி அலுவலகத்தில் கிடைக்கப் பெற்றது. பின்னர் செயல் அலுவலரால் மேற்படி குடிநீர் திட்டம் செயல்படுவது குறித்து தலஆய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னரே 27.08.2021 அன்று பட்டியல் தொகையில் (ரூ.3,58,904/-) உரிய பிடித்தங்கள் தொகை ரூ. 29,507/- போக மீதமுள்ள தொகை ரூ. 3,27,397/- ஒப்பந்ததாரர் திரு. சி.ராஜன் என்பவருக்கு பேரூராட்சி அலுவலக செலவுசீட்டு எண். 217, நாள் 27.08.2021-இன்படி வழங்கப்பட்டுள்ளது. இப்பட்டியல் தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டதில் எவ்வித முறைகேடோ, உள்நோக்கமோ இல்லை. மேலும் செய்து முடிக்கப்பட்ட பணிக்கான பட்டியல் தொகை மட்டுமே வழங்கப்பட்டது. ஆதாயத்திற்காக பட்டியல் தொகை எதுவும் வழங்கப்படவில்லை. மேலும் பட்டியல் தொகை வழங்கப்பட்டதற்கு எவ்விதமான அவசரமும் பேரூராட்சியிலிருந்து காட்டப்படவில்லை. செய்து முடிக்கப்பட்ட பணிக்கு உதவிப் பொறியாளர் மற்றும் செயற்பொறியாளரால் தயார் செய்து வழங்கப்பட்ட பட்டியலுக்கே ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது. இதில் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு ஒப்பந்ததாரருடன் எவ்விதமான கூட்டுசதி மற்றும் முறைகேடு எதுவும் நடைபெறவில்லை. மேலும் புலையன்விளை பகுதியில் அமைந்துள்ள குடியிருப்புகளுக்கு பேரூராட்சி மூலம் குடிநீர் இணைப்பு மற்றும் சொந்த ஆழ்குழாய் கிணற்றின் மூலம் தண்ணீர் பயன்படுத்தி வருகின்றனர். அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் குடிநீர் பயன்பாட்டிற்கு மட்டுமே மேற்படி குடிநீர் திட்டத்திலிருந்து தண்ணீர் எடுப்பதால் குடிநீரின்

தேவை குறைவாகவே உள்ளது. இத்திட்டத்தின் செயல்பாடு குறைவாகவே பொதுமக்களுக்கு தேவைப்படுவதால் மின்கட்டணம் குறைவாகவே செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் இக்குடிநீர் திட்டம் செயல்படுவதற்கான புகைப்பட ஆவணம், இளநிலைபொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்ட பட்டியல் நகல் மற்றும் பேரூராட்சி மன்றத்தலைவர் அறிக்கை புலையன்விளை பகுதி வார்டு உறுப்பினர் அறிக்கைகள் இத்துடன் இணைத்து பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

4) மனுதாரர் மற்றும் பாகோடு செயல் அலுவலரும் 21.08.2023 அன்று மதுரை முகாமில் சர்க்யூட் ஹவுஸில் (Circuit House) நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 14.08.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) 21.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

கன்னியாகுமரி மாவட்டம் பாகோடு பேரூராட்சி வார்டு எண் 5 புலயன்விளை பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய 2020–21 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் ரூபாய் 4 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஆழ்குழாய் கிணறு அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய போர்வெல் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. பணிகள் முழுமையாக நடைபெற்றதா, திட்ட மதிப்பீட்டின்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்யாமல் பட்டியல் தொகை ரூபாய் 3,58,904/-அவசர அவசரமாக ஒப்பந்ததாரருக்கு பாகோடு பேரூராட்சியால் வழங்கப்பட்டுவிட்டது. ஆனால் அங்கு மேற்கண்ட மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. அப்பணிகளின் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகமும் நடைபெறவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே மேற்கண்ட குடிநீர் விநியோகப் பணியை முறையாக செய்து முடித்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 11.7.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

6) பாகோடு பேரூராட்சியின் செயல் அலுவலர் 21.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

மனுதாரர் தெரிவித்துள்ள கன்னியாகுமரி மாவட்டம் பாகோடு பேரூராட்சி புலையன்விளையில் ஆழ்குழாய் கிணறு மற்றும் பைப்லைன் பணிகளில் 2020–21 ஆம் வருட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூபாய் 4 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தங்கள் பெறப்பட்டு குறைவான விலைப் புள்ளியை அளித்த ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டது. மேற்கண்ட பணியில் பிடித்தம் போக ஒப்பந்ததாரருக்கு ரூ 3,27,397/– வழங்கப்பட்டுள்ளது என்பதையும், மேற்கண்ட ஆழ்குழாய் கிணற்றின் மூலம் புலையன்விளை பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்து அதன் புகைப்பட நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் எனது 21.8.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், பாகோடு பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

கன்னியாகுமரி மாவட்டம் பாகோடு பேரூராட்சி வார்டு எண் 5 புலயன்விளை பகுதியில் குடிநீர் வழங்கும் வகையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ. 4 இலட்சம் மதிப்பீட்டில் ஆழ்குழாய் கிணறு அமைக்கும் பணியில், பணியினை முழுமையாக நடைபெறாமலேயே முறைகேடாக ஒப்பந்ததாருக்கு பட்டியல் தொகை வழங்கப்பட்டு, திட்டத்தினை செயல்படுத்தப்பட வில்லை என புகார் தெரிவித்துள்ளார்.

2020–21ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பாகோடு பேரூராட்சிக்குட்பட்ட புலையன்விளை பகுதியில் ரூ. 4 இலட்சம் மதிப்பீட்டில் ஆழ்குழாய் கிணறு அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு 27.08.2021–ல் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு, 27.8.2021 அன்றே ஒப்பந்ததாருக்கு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளதையும் மற்றும் மேற்படி திட்டத்தின்கீழ் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக பேரூராட்சியால் செலுத்தப்பட்டுள்ள மின்கட்டணமும் சொற்ப தொகையில் உள்ளதையும் கருத்தில் கொள்ளும்போது மேற்காணும் திட்டமானது முழுமையாக செயல்படுத்தப்படுகிறதா என்கிற அய்யப்பாடு எழுகிறது. மேற்காணும் திட்டம் பயன்பாட்டிற்கு 27.8.2021 அன்று வந்ததாக பேரூராட்சியால் தெரிவித்துள்ள நிலையில், ஒப்பந்ததாரர் ஆழ்குழாய் கிணறு அமைத்த பணியினை முழுமையாக செய்துள்ளாரா என்கிற அடிப்படை ஆய்வுகூட செய்யாமல் 27.8.2021 அன்றே ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டிருப்பதன் மூலம் பேரூராட்சி செயல் அலுவலர் உள்நோக்கத்துடன் செயல்பட்டுள்ளதாக இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

8) இந்நிலையில் மேற்காணும் ஆழ்குழாய் கிணறு அமைத்த திட்டமானது முழுமையாக நடைபெற்றுள்ளதா என்பதை உறுதி செய்யும் பொருட்டு, பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலகத்திலிருந்து மூத்த செயற்பொறியாளர் மூலம் ஆய்வு மேற்கொண்டு அறிக்கையினை 30 நாட்களுக்குள் பெற்றிடுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

9) மேலும் ஒப்பந்ததாருக்கு ஆழ்குழாய் கிணறு அமைத்து பயன்பாட்டிற்கு வந்த நாளிலேயே பட்டியல் தொகை வழங்கப்பட்டிருப்பதால் இதில் முறைகேடுகள் நடைபெற்றிருக்கலாம் என அய்யப்பாடும் எழுகின்றது. ஆகவே இது குறித்து தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை மூலம் தணிக்கை செய்து, அதன் அறிக்கையினை 2 மாத காலத்திற்குள் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

பேரூராட்சிகளின் இயக்குநரக அலுவலக செயற்பொறியாளரின் களஆய்வு அறிக்கை மற்றும் உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கையிலோ முறைகேடுகள் ஏதும் கண்டறியப்பட்டால் முறைகேடுகளுக்கு காரணமான சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல்

அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது உரிய விதிகளின்கீழ் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 05–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்/–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. C.மோகனதாஸ்,
28–95, வலியவிளை, பேரை,
பாகோடு அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம் 629 168

2) செயல் அலுவலர்,
பாகோடு பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இயக்குநர்,
உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை,
571, அண்ணாசாலை, நந்தனம்,
சென்னை–600 035

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600 028.

நகல்,
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை-600 032

செயலாளர்
12/9/23